முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1007

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.07.2022, சனிக்கிழமை

1. ஆறுமுகன் என் அவதார மகா சூட்சுமமே
அண்ணலாக வாழுகின்ற ஞான பிரம்மமே
மாறுதலை கலியில் செய்வேன் என்று
மாதவபலமாய் வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென சுபகிருது மிதுன திங்கள்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 18 நாள், 02.07.2022 சனிக்கிழமை)
வல்லமைகூட அரங்கனுக்கு யான் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தர்மம்
உலகை மாற்றுவது உறுதி
குறைவிலா அரங்கன் சன்மார்க்கம்
குவலயத்தாரை நல்வழிக்கு கொண்டுவருவதும் உறுதி
4. உறுதிகொண்டு இந்த அற்புதத்தை
உலகோர்க்கு அரங்கன் வரமாக
கருதிவரும் அன்பர்கள் அனைவருக்கும்
கலியுகத்தை மீட்கும் சக்தியாக வழங்கி வர
5. வருகவே அரங்கன்பால் வையகத்தார்
வருமுலகில் பற்று கொண்டு சன்மார்க்கம் அகலா
அகலா தொடர்ந்து வருதல் காண
அனைவருக்கும் ஞான சித்தி உறுதி
6. உறுதி தந்து உலகை மாற்றுகின்ற
உயர் சக்தியாக இந்த தொண்டர்களெல்லாம்
வருமுலகில் சூட்சும பலம் பெருகி
வையகத்தை காப்பதும் உறுதியாகும்
7. உறுதி தந்தேன் ஆறுமுகன் இதுகாலம்
உயர்வான அரங்கன் வழி இந்த கலியுகம் மாறுமென்று
ஆறுமுகன் என் சூட்சும வழிபாட்டை அனைவருக்கும் சரவணஜோதி ஏற்றி
மாறுதல் வேண்டிச் செய்யும் அரங்கனே மண்ணுலகை காக்கும் மாதவசியே
8. தவசியின் உண்மை நிலைதன்னை
தரணியே அறிந்து அடையாளம் கண்டு
பெருமைபட தொடர்ந்து வருதல் காண
பேருலகம் மாற்றம் பெறுவது உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–